**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>COS – 1/2022</u>**

நாள் 08.04.2026

PW 1 – S.A.ஜெயக்குமார்

த/பெ – சாமிநாதன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of April 2026.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் எங்களது கம்பெனி மூலமாக Chamraj Knitts கம்பெனிக்கு ஆர்டரின் பேரில் ரூ.28,36,310/– மதிப்பு கொண்ட டி.சர்ட்களை கொடுத்ததில் பிரதிவாதி செலுத்திய வரவு செலவு போக மீதமுள்ள நிலுவைத் தொகையான ரூ.18,34,310/–ஐ கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் வாதி கம்பெனியில் மேலாண்மை பங்குதாரராக இருந்து வருகிறேன். பிரதிவாதி Chamraj Knitts கம்பெனியை ஆரம்பத்தில் சிவப்பிரகாசமும், அவரது தாயாரும் சேர்ந்துதான் நடத்தி வந்தார்கள். தற்போது சிவப்பிரகாசம் மட்டும்தான் பிரதிவாதி கம்பெனி chamraj Knitts கம்பெனியை தனி உரிமையாளராக இருந்து நடத்தி வருகிறார். அதேபோல் பிரதிவாதி சிவப்பிரகாசத்தின் உடன்பிறந்த சகோதரர் கோபாலகிருஷ்ணமூர்த்தி என்பவர் Chamraj Knits என்ற பெயரில் மற்றொரு கம்பெனியை தனி உரிமையாளராக இருந்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் ECO CARE KNITS என்ற கம்பெனியை தனி உரிமையாளராக இருந்து தனியாக நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கு பிரதிவாதி சிவப்பிரகாசம் மேற்படி ECO CARE KNITS என்ற கம்பெனியின் தனி உரிமையாளரான என் மீது திருப்பூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் COS No.38/2021 என்ற வழக்கை ரூ.72,08,617/-ஐ கேட்டு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டுதான் நான் இந்த வழக்கு பிரதிவாதி சிவப்பிரகாசத்தின் மீது திருப்பூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் COS No.43/2022 என்ற வழக்கையும், இந்த நீதிமன்றத்தில் உள்ள இந்த வழக்கையும் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.04.09 19:11:14 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**